# DEPOSITION OF WITNESS

(In the Court of the Subordinate Judge`s Sankarankovil )

O.S.No.77/2019

****

| | |
|---|---|
| Deposition of Witness for | : PW1 |
| Name | : செல்வி |
| Father`s Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | : 09.08.2019 |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of.

**முதல் விசாரணை தொடர்ச்சி :**

சாட்சி இன்றைய தினம் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு, முதல் விசாரணைக்கு அனுமதிக்கப்பட்டார்.

நான் 3 ஆம் வாதி. எனது முதன்மை சாட்சியத்தை நிரூபண ஆணை உறுதி ஆவணமாக தாக்கல் செய்கிறேன். நிரூபண ஆணை உறுதி ஆவணம் எனது தகவலின் பேரில் தான் தயார் செய்யப்பட்டது. அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். கடந்த 09.09.2009 ஆம் தேதியில் ராமர்வகையறா பிறப்பித்துக் கொண்ட பதிவு பாக ஆவணத்தின் அசல் வா.சா.ஆ.1. கடந்த 14.09.2015 ஆம் தேதியில் 2 ஆம் வாதிக்கு, ராமர் எழுதி வைத்த அடமான ஆவணத்தின் அசல் தாக்கல் செய்கிறேன். அது இது நாள்வரையில் தீர்க்கப்படாததால் மேல்நடவடிக்கைக்கு தேவைப்படுகிறது. எனவே நகல் தாக்கல் செய்கிறேன். அது வா.சா.ஆ.2. ராமர் என்பவரின் இறப்பு சான்று வா.சா.ஆ.3. தாவா சொத்துக்களுக்கான பட்டா எண்.1160, 1611, 1158, 1159, 1156

ஆகியவற்றிற்கான கணிணி பதிவிறக்க நகல் வா.சா.ஆ.4 வரிசை. மேற்படி பட்டாக்களுக்கு கடந்த 11.02.2019 ஆம் தேதியில் தீர்வை செலுத்தியதை காட்டக் கூடிய தீர்வை ரசீது வா.சா.ஆ.5. கதவு எண்.2/371 கடந்த 14.01.2019ல் வீட்டி வரி செலுத்தியதை காட்டக் கூடிய வீட்டு வரி ரசீது வா.சா.ஆ.6. மின் இணைப்பு எண்.909க்கு மின் கட்டணம் செலுத்தியதை காட்டக் கூடிய மின் கட்டண ரசீது வா.சா.ஆ.7. பிராதுபடி தீர்ப்பாக கேட்டுக் கொள்கிறேன்.